All Rights Reserved

**இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**ஆரம்பப் பரீட்சை - 2012 ஜனவரி**

# (52) பொருளியல்
(Economics)

21.01.2012
பிற்பகல்
2.00 – 4.00

**நேரம்: 02 மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 07
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

*(1) இவ்வினாத்தாள் **A,B** என்னும் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டுள்ளது*

*(2) **கீழே காட்டியவாறு ஐந்து (05)** வினாக்களுக்கு விடை அளித்தல் வேண்டும்:*

- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 க்கும்***
- ***பகுதி B யிலிருந்து ஏதேனும் நான்கு(04) வினாக்களுக்கும்***

*(3) **விடைகள்** யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த **அதே ஒரு மொழியிலேயே** எழுதப்படவேண்டும்.*

*(4) வரைபுதாள் வழங்கப்படும்.*

*(5) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி - A
பல்தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
40 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் மிகவும் சரியான விடையைத் தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் பதில்களிலிருந்து தெரிவுசெய்து உமது **விடைப்புத்தகத்தில்** வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) தொடர்ச்சியான பொருளாதார நடவடிக்கைகளின் செயலொழுங்கு (Process) பின்வருவனவற்றுள் எதுவாகப் பிரிக்கப்படக்கூடும் ?

(1) பண்ணைத்தொழில், அகழ்வு / சுரங்கத்தொழில், தயாரிப்புத்தொழில் (Manufacturing)

(2) உற்பத்தி, விநியோகம், நுகர்வு.

(3) மனிதத் தேவைகள், வளங்கள், பற்றாக்குறை.

(4) விவசாயம், கைத்தொழில், சேவைகள்.

(B) மனித மூலதனம் (Human Capital) என்பதன் கருத்து,

(1) தொழிலாளர் அணியின் விரிவாக்கம் (Expansion in the labour force)

(2) தொழிலாளரின் முன்னேற்றமான பண்புசார் நிபந்தனை (Improved qualitative condition of the labour)

(3) உற்பத்தியில் மனிதனால் ஆக்கப்பட்ட எல்லா வளங்களினதும் பயன்பாடு.

(4) உற்பத்தி நோக்கத்திற்காக மனிதனின் உள அல்லது உடல் இயலுமையின் பயன்பாடு.

(C) பண்டம் ஒன்றின் கேள்விக்கான விலை நெகிழ்ச்சியானது, நெகிழ்வின்மையாக (inelasticity) இருக்கும்போது விலையை 1% ஆல் அதிகரித்தால் விளைவு,

(1) கேள்வி அளவில் 1% இலும் குறைவானதொரு இறக்கம்

(2) கேள்வி அளவில் 1% இலும் மிஞ்சிய குறைப்பு

(3) கேள்வி அளவில் ஒரு விகிதாசார மாற்றம்

(4) மொத்த வருவாயில் ஒரு வீழ்ச்சி

(D) பின்வருவனவற்றுள் எது ஆடைகளுக்கான நிரம்பல் வளையியை வலப்பக்கமாக நகர்த்திச் செல்லும் ?

(1) நுகர்வோரின் வருமானத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு

(2) ஆடைகள் தயாரிப்பில் பயன்படுத்திய இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி மீதான இறக்குமதி வரியில் (Tariff) ஒரு குறைப்பு

(3) ஆடைகள் தயாரிப்பாளர்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு வெற்றிகரமான விளம்பரப் பிரசாரம் (advertising campaign)

(4) ஆடைகளின் விற்பனை விலையில் ஒரு அதிகரிப்பு

(E) பின்வரும் வரைபு பண்டங்கள் *x*, *y* ஆகியவற்றுக்கான உற்பத்திச் சாத்திய வளையி **A** மற்றும் **B** ஐக் காட்டுகிறது.




அது $A_1 B_1$ இற்கும் $A_2 B_2$ இற்கும் நகர்த்தப்பட்டபோது பின்வருவனவற்றுள் எதனால் பொருளாதார வளர்ச்சி காட்டப்படுகிறது ?

(1) **M** to **N**. (2) **N** to **M**. (3) $A_1 B_1$. (4) $A_2 B_2$.

(F) உபேட்சைப் படம் (Indifference Map) என்பதாற் கருதப்படுவது யாது?

(1) அது உற்பத்தியின் வேறுபட்ட மட்டங்களைத் தருகின்ற உற்பத்திச் சாத்திய வளையிகளின் ஒரு தொகுதி

(2) அது சமமான திருப்தியைத் தருகின்ற உபேட்சை வளையிகளின் ஒரு தொகுதி

(3) அது திருப்தியின் வேறுபட்ட மட்டங்களைத் தருகின்ற உபேட்சை வளையிகளின் ஒரு தொகுதி

(4) அது கேள்வியின் வேறுபட்ட மட்டங்களைத் தருகின்ற கேள்வி வளையிகளின் ஒரு தொகுதி

(G) பின்வரும் வரைபடம் $x$ பொருளுக்கான கேள்வி, நிரம்பல் கோடுகளைக் காட்டுகிறது,




உற்பத்தியாளனின் மிகை (Producers surplus) காட்டப்படும் பகுதி :

(1) **$PP_2E$.** (2) **$P_1PE$.** (3) **$P_1OQE$.** (4) **OPEQ.**

(H) பண்டமொன்றிற்கான கேள்வி, நிரம்பல் வளையிகளை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.




அரசாங்கம் ஒரு உச்ச விலையை $P_1$ இல் விதிக்குமேயானால் மேலதிக விலைக் கேள்வியாக இருப்பது எது ?

(1) **$Q - Q_1$** (2) **$Q_1 - Q_2$** (3) **$Q_2 - Q$** (4) **$O - Q_2$**

(I) கேள்வியின் நெகிழ்ச்சி என்பதனால் கருதப்படுவது யாது ?

(1) விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு உற்பத்தி மீது அதிகமாக செலவளிக்க நுகர்வோரைத் தூண்டுகிறது.

(2) விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு கேள்வித் தொகையில் ஒரு குறைப்பினைக் கொண்டு வருகிறது.

(3) விலையில் ஏற்படும் ஒரு மாற்றம், செலவினத்திலான மாற்றத்தின் பிரதியுத்தாரம்.

(4) விலை வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றத்திற்கும் கேள்வியைப் பாதிக்கின்ற ஏனைய பொருட்களின் விலைக்கும் கேள்வி அளவின் பிரதியுத்தாரம்.

(J) 2010 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க 2010 ஆம் ஆண்டில் ஆள்வீத வருமானம் இலங்கையில் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின்படி)

(1) 2,057 அமெரிக்க டொலர்கள்　　(2) 2,014 அமெரிக்க டொலர்கள்

(3) 2,033 அமெரிக்க டொலர்கள்　　(4) 2,399 அமெரிக்க டொலர்கள்

(K) இடைநிலைப் பொருட்கள் (Intermediate Good) பற்றி விபரிக்கின்ற வாக்கியத்தை பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க.

(1) ஒரு தடவைக்கு மேல் பயன்படுத்தக்கூடிய பொருட்கள்

(2) நுகர்வோரின் தேவைகள் (needs) விருப்புக்கள் (wants) ஆகியவற்றை நேரடியாக திருப்திப்படுத்துகின்ற பொருட்கள்

(3) முடிவுப் பொருட்களின் உற்பத்திக்கான உள்ளீடுகளாகவும் மூலப்பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள்

(4) விளைதிறனுடைய, ஆனால் பாவனை காரணமாக தேய்மானம் அடைகின்ற பொருட்கள்

(L) வருமான வட்டப் பாய்ச்சலிலிருந்து (circular flow of income) மீள் பெறுகையாகக் கொள்ளக்கூடியது எது ?

(1) ஏற்றுமதிகள்

(2) முதலீடு (Investment)

(3) அரசாங்கச் செலவினம் (Government expenditure)

(4) வரி விதிப்பு (Taxation)

(M) குறிப்பிட்டதொரு ஆண்டில் ஒரு நாட்டினது தேசிய வருமானத்தின் விபரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| | **ரூபா. (மில்லியன்)** |
|---|---|
| சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தி (G.N.P) | 50 |
| நேரில் வரிகள் | 9 |
| மானியங்கள் | 1 |
| ஏற்றுமதிகள் | 5 |
| இறக்குமதிகள் | 6 |
| மூலதன நுகர்வு | 5 |

காரணிக்கிரய விலை (factor cost prices) தேறிய தேசிய உற்பத்தியின் பெறுமதியைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிக.

(1) ரூ.36 மில்லியன்.　　(2) ரூ.37 மில்லியன்.

(3) ரூ.42 மில்லியன்.　　(4) ரூ.45 மில்லியன்.

(N) குறுகிய பண நிரம்பலில் அளவிடப்பட்டதாக (measured under Narrow Money Supply) பணநிரம்பலில் உள்ளடங்குவது பின்வருவனவற்றுள் எது ?

(1) பொதுமக்களால் வைக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புக்கள் (Demand deposits)
(2) வணிக வங்கிகளில் பொதுமக்களால் வைக்கப்பட்டுள்ள சேமிப்புகளும் கால வைப்புகளும் (Savings and time deposits)
(3) வணிக வங்கிகளில் பொதுமக்களால் வைக்கப்பட்டுள்ள வதிவிட, வதிவிடமல்லா வெளிநாட்டு நடைமுறைக் கணக்குகளில் மீதிகள்
(4) வங்கியல்லாத நிதி நிறுவனங்களில் பொதுமக்களால் வைக்கப்பட்டுள்ள சேமிப்புகளும் கால வைப்புகளும்.

(O) ஒரு நாட்டில் பொது விலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பொன்றின் உடனடித் தாக்கம்

(1) வேலையின்மை மட்டத்தில் வீழ்ச்சி
(2) முதலீட்டு மட்டத்தில் வீழ்ச்சி
(3) பணத்தின் உண்மைப் பெறுமதியில் வீழ்ச்சி
(4) தனியாள் செலவிடும் வருமானத்தில் வீழ்ச்சி (personal disposable income)

(P) பணத்தின் பண்பியல்பு (characteristic of money) அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

(1) உள்ளீட்டுப் பெறுமதியானது (intrinsic value) முகப்பெறுமதிக்கு (face value) சமமானதாக இருத்தல்.
(2) சிறிய அலகுகளாகப் பிரிக்கக்கூடிய தன்மை (Divisibility into small units)
(3) பொது ஏற்புடைமை (General acceptability)
(4) கொண்டுசெல்திறன் (Portability)

(Q) 2010 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கிணங்க அமெரிக்க டொலர் அடிப்படையில் ஆண்டிறுதியில் இலங்கைப் பொருளாதாரத்தில் வெளிநாட்டு நாணயமாற்று வீதம் :

(1) ரூ.110.95. (2) ரூ.108.33. (3) ரூ.114.94. (4) ரூ.113.06.

(R) அரசாங்கத்தின் நடைமுறைச் செலவினம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது ?

(1) பொதுக்கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்
(2) அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட வரட்சிக் கொடுப்பனவுகள் (Drought relief payments)
(3) அரசாங்கத்தால் அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளங்களும் கூலிகளும் (Salaries and wages)
(4) அரசாங்கத்தால் மெய் சொத்துகளின் சுவீகரிப்புகள் (Acquisitions of real assets)

(S) நேரில் வரிகளின் பண்பியல்பு (characteristic of Indirect Tax) **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது ?

(1) இன்னுமொரு கட்சியினருக்கு எப்போதும் மாற்றக்கூடிய வரிகள்

(2) இன்னுமொரு கட்சியினருக்கு மாற்ற முடியாதது

(3) பொருட்கள் கொள்வனவு செய்யப்படும்போது மட்டும் வரி செலுத்தப்படுகிறது

(4) வரிகள் பொதுவாக பின்னடைவு வரிகள்(regressive taxes) எனக் கொள்ளப்படும்

(T) பெருவீதிச் செயற்றிட்டங்களின் (highway projects) பிரதான நன்மையை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1) போக்குவரத்தானது இலாபத்துடன் மேற்கொள்ளப்பட முடியும்.

(2) உல்லாசப்பயணக்துறைத் தொழிலுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

(3) சமமான பிரதேச அபிவிருத்தியின் தீர்மானக் காரணி.

(4) போக்குவரத்து உரிய நேரத்தில் வழங்கப்பட முடியும்.

(ஒவ்வொன்றும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலிருந்து ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
60 புள்ளிகள்

**02.** (a) மத்திய திட்டமிட்ட பொருளாதாரத்தாலும் கலப்புப் பொருளாதாரத்தாலும் எவ்வாறு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன ? (09 புள்ளிகள்)

(b) சந்தைப் பொருளாதார முறைமையின் பலவீனங்கள் நான்கினைப் (04) பட்டியற்படுத்துக. (04 புள்ளிகள்)

(c) சந்தர்ப்பச் செலவில் இரண்டு (02) நடத்தைகளைப் பட்டியலிடுக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) உற்பத்திக் கோட்பாட்டில் குறுங்கால ஓட்டம் (Short-run) நீண்டகால ஓட்டம் (Long-run) ஆகியவற்றை வேறுபடுத்துக.
(04 புள்ளிகள்)

(b) தனியுரிமையின் குறுங்காலச் சமநிலையை ஒரு வரைபடத்தின் துணையோடு சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

(c) நிறைபோட்டி, தனியுரிமை ஆகியவற்றிற்கிடையேயான வித்தியாசங்கள் ஆறினை (06) பட்டியலிடுக. (06 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

04. (a) எல்லைப்பயன் கோட்பாட்டின் கீழ் (under the marginal utility theory) நுகர்வோர் சமநிலைக்கான நிபந்தனைகளை (conditions) சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(b) விலையில் ஏற்படும் ஒரு மாற்றத்தின் வருமானத் தாக்கம் (Income effect) பதிலீட்டுத் தாக்கம் (substitution effect) ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(c) நிரம்பல் நெகிழ்ச்சியின் நிர்ணயிப்புகள் (determinants) எவையெனக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

05. (a) ஒரு நாட்டின் பிரதான பெரும்பாகப் பொருளாதார மாறிகளை (main variables) பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(b) மொத்தத் தேசிய உற்பத்தியைப் (GNP) பொறுத்தமட்டில் நடைமுறை விலைகள் (current prices) மாறா விலைகள் (constant prices) ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டை விளக்குக. (05 புள்ளிகள்)

(c) (i) ஆள்வீத வருமானம் (Per-capita Income) என்பதன் கருத்து யாது ?(02 புள்ளிகள்)

(ii) ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தை (standard of living) அளப்பதற்கு ஆள்வீத வருமானத்தின் வரையறைகளை (limitations) விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

06. (a) பணத்தின் தொழிற்பாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(b) அண்மிய பணம் (Near money) என்பதை விபரித்து இரண்டு உதாரணங்கள் தருக.

(04 புள்ளிகள்)

(c) (i) "கேள்வித் தூண்டல் பணவீக்கம்" (Demand Pull Inflation) என்றால் என்ன ? (02 புள்ளிகள்)

(ii) ஒரு நாட்டின் கேள்வித் தூண்டல் பணவீக்கத்திற்கான மூன்று (03) காரணங்களைப் பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

07. (a) அரசாங்கப் பாதீட்டின் பிரதான பண்புக்கூறுகள் எவை ? (05 புள்ளிகள்)

(b) வரிவிதிப்பின் குறிக்கோள்களை (objectives of the Taxation) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(c) அரசாங்கக் கடனின் பொருளாதார விளைவுகளைப் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

- o0o -